Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 40 | புதன்கிழமை Wednesday | 10.12.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# வாக்காளர் பட்டியல் வரும் வரை அனைவரும் தீவிரமாக பணியாற்ற வேண்டும்

## திமுக மாவட்டச் செயலாளர்களிடம் முதலமைச்சர் ஸ்டாலின் அறிவுறுத்தல்





திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் 'என் வாக்குச் சாவடி-வெற்றி வாக்குச் சாவடி' என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நேற்று நடைபெற்றது.

இதற்குதிமுகதலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து பேசியதாவது: தமிழக மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் உயரிய நோக்குடன், பசி, உறக்கம்,குடும்பம் ஆகியவற்றைத் துறந்து எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள்.

அதேநேரம் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்து, மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியல் வரும் வரை அனைவரும் களத்தில் தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும். எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழகத்தை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன்தான். நமது அரசின்திட்டங்களின்மூலம், 1.86 கோடி மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர்.

நமது சிறப்பான பணிகளை பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று ஆதரவாக நிற்கின்றனர். மொத்தமாக, பயனாளிகள்–திமுகவினர்–நடுநிலை வாக்காளர்கள் எனசேர்த்தால்,2.5 கோடி வாக்குகளை தாண்டுவது சாத்தியமே. 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் நமது கூட்டணி பெற்ற வாக்குகள் 2.09 கோடியாகும். இம்முறை அதைவிட கூடுதலாக வாக்குகளை பெற்று மீண்டும் ஆட்சியமைப்பது உறுதி.

இத்தனை சாதகமான சூழல்கள் இருந்தாலும், நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சிபிஐ, ஈடி, ஐடி, தேர்தல் ஆணையம் என அனைத்தையும் நமக்கு எதிராக பயன்படுத்துவார்கள். அவற்றை எதிர்கொள்ள நமது பலத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்.

வீடு வீடாக செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினரும் வீடு வீடாகச் சென்று விடுபட்ட வாக்காளர்களின் விவரங்களை முறையாகசரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும்,அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். ஒரு வாக்குச்சாவடியை வென்றால், ஒரு தொகுதியை வெல்லலாம். எனவே, இந்த தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியும் முக்கியமானது.

உங்கள் வாக்குச்சாவடியில் வெற்றி பெறும் பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன். என் நம்பிக்கையை காப்பாற்றுங்கள். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் திமுக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின், அமைச்சர்கள், மாவட்டச்செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# "மக்களுக்கு சட்டங்கள் சுமையாக இருக்கக் கூடாது!"

## என்டிஏ எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி:

"எந்தவொரு சட்டத்தாலும், விதிகளாலும் எந்த அப்பாவி இந்தியரும் துன்புறுத்தலையோ அல்லது சிரமத்தையோ சந்திக்கக் கூடாது. சட்டங்கள் எப்போதும் சாதாரணமக்களின் வசதிக்காக இருக்க வேண்டும்" என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். டெல்லியில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்.பி.க்கள் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "பொருளாதாரத்தில் மட்டுமல்ல, சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்" என்றார்.

என்டிஏ எம்.பி.க்கள் கலந்து கொண்ட கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜு, "பிரதமர் மோடி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிகச் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கினார்.

சட்டங்கள் யாருக்கும் சுமையாக இருக்கக் கூடாது, மக்களின் வசதிக்காக இருக்க வேண்டும்என்று பிரதமர் கூறினார். விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை அமைப்பை மேம்படுத்துவதற்காக இருக்க வேண்டும், மக்களைத் துன்புறுத்துவதற்காக அல்ல. எந்தச் சட்டமும் மக்களைத்துன்புறுத்தும் வகையில் இருக்கக் கூடாது.

வளர்ச்சிப் பணிகளை மூன்று மடங்கு வேகத்தில் விரைவுபடுத்தவும், இளைஞர்களை விளையாட்டு மற்றும் பிற செயல்பாடுகளுடன் இணைக்கவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

இந்தக் கூட்டத்தின் தொடக்கத்தில், சமீபத்திய பிஹார் தேர்தலில் என்டிஏ பெற்ற மகத்தான வெற்றிக்காக பிரதமர் மோடி பாராட்டப்பட்டார்" என்று கிரண் ரிஜிஜு கூறினார். மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா மற்றும் பாஜக தலைவரான ஜே. பி. நட்டா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாநிலங்களவை உறுப்பினர்களான ஜேடியு தலைவர் சஞ்சய் ஜா மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா தலைவர் ஆகியோர் பிரதமர் மோடிக்கு மாலை அணிவித்தனர். இந்நிலையில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி எம்.பி.க்களுக்கு பிரதமர் மோடி விருந்து அளிக்க உள்ளார். (11ம் தேதி) கூட்டணி கட்சி எம்.பி.க்களுக்கு பிரதமர் மோடி விருந்து அளிக்கிறார். இந்த விருந்தில் பங்கேற்குமாறு அதிமுக எம்.பி.க்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு மாநிலங்களில் இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்கள் மோடி அளிக்கும்விருந்துநிகழ்ச்சியில் பங்கேற்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

# "மக்கள் சந்திப்பை, பிரசார முன்னெடுப்புகளை தி.மு.க. அரசு தடுக்கப் பார்க்கிறது"

## புதுச்சேரியில் நடந்த தவெக பொதுக்கூட்டத்தில் விஜய் பேச்சு



சென்னை,

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும்.. புதுச்சேரி மாநில மக்களுக்கு என் அன்பான வணக்கம்.

எல்லைகள் கடந்து, மொழியாலும் மனத்தாலும் எப்போதும் இணைந்திருக்கும் நாம், ஒரு புதிய அரசியல் வரலாற்றுக்கான அத்தியாயத்தை இன்று புதுச்சேரி மண்ணில் தொடங்கியிருக்கிறோம்.

நிலப் பரப்பிலும், நிர்வாகக் கட்டமைப்பிலும் சிறிய யூனியன் பிரதேசம் என்றாலும், கட்சி பேதமின்றி, வெறுப்புணர்வின்றி எதிர்க்கட்சியான நம் நிகழ்வுக்கு மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்து நம் பாதுகாப்பிலும், பொதுமக்கள் பாதுகாப்பிலும் ஜனநாயக அரசியல் மாண்போடு புதுச்சேரி அரசு நடந்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில், புதுச்சேரி அரசுக்கும், முதல்அமைச்சர் அவர்களுக்கும் உள்துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் புதுச்சேரி மாநிலக் காவல் துறைக்கும் நமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எழுச்சிமிக்கநம் இளைஞர் படையினரும் கட்டுக்கோப்பும் பொறுப்பும் மிக்கவர்கள் என்பதை அவதூறாளர்களுக்குப் புரிய வைத்துள்ளார்கள்.

அதிகாரத்தை வைத்துக்கொண்டு, சட்டத்தை வளைத்து, சூழ்ச்சிகள் உட்பட என்னென்னவோ திட்டம் போட்டு நம் அரசியல் பயணத்தை, மக்கள் சந்திப்பை, பிரசார முன்னெடுப்புகளை இந்தக் கபட நாடகத் தி.மு.க. அரசு தடுக்கப் பார்த்தாலும், முடக்க முயன்றாலும், அது அணுவளவும் நடக்காது.

கழகத்தின் எதிர்பார்ப்பை, வேண்டுகோள்களை, உத்தரவுகளை மனதார மதித்து, நிகழ்வை வெகு வெற்றிகரமாக நடத்த ஒத்துழைத்த, அதற்குக் காரணமாயிருந்த தமிழகம், புதுச்சேரி மக்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் மனமார்ந்த நன்றி!

வென்று காட்டுவோம்! வாகை சூடுவோம்..

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சூறைக்காற்று எச்சரிக்கை: மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை



ராமேசுவரம்: பாக்நீரிணை கடற்பகுதியில் பலத்த சூறைக்காற்று எச்சரிக்கையால் ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்ல மீன்வளத் துறை தடை விதித்துள்ளது.

தமிழக கடலோரப் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதி, தென்தமிழக கடலோரப் பகுதி, தென்மேற்கு வங்கக் கடல் பகுதி, குமரிக் கடல் பகுதிகளையொட்டிய மாலத்தீவு பகுதிகளில் வரும் 13-ம் தேதி வரை பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ராமேசுவரம்பாக்ஜலசந்தி கடலில் காற்றின் வேகம் 45 கி.மீ முதல் 55 கி.மீ வேகம் வரையிலும் வீசக்கூடும். எனவே மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம்.

இதனால் நாளை () மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி டோக்கன் வழங்கப்பட மாட்டாது என மீன்வளத் துறை அறிவித்துள்ளது. மேலும், மீன்பிடி இறங்குதளங்களில் படகுகளை இடைவெளி விட்டு பாதுகாப்பாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல தடையால் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் 700-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே, வளிமண்டலகீழடுக்குசுழற்சி காரணமாகதமிழகத்தில் ஓரிரு இடங்களில் டிசம்பர் 15-ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



கடலூர் மாவட்டம் வேப்பூர் தனியார் திருமண மண்டபத்தில், திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும், நல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி அவர்களின் மகன் நல்லூர் வடக்கு ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் கதிரவன் பிரேமா இவர்களின் வளையலணி நிகழ்வை தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ.கணேசன் தலைமையில் நடத்தி வைத்தார். உடன், கட்சி நிர்வாகிகள், திரளான அரசியல் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து தம்பதியினரை வாழ்த்தினார்கள்.

# வேப்பூர் அருகே அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

*கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள பெரிய நெசலூர் கிராமத்தில் சட்டமேதை உள்ளிட்ட கல்வி உபகரணங்கள், மற்றும் 500 பேருக்கு அன்னதானம் வழங்கும் விழா நல்லூர் ளர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பாஸ்கர், ஒன்றிய மாணவரணி*



*டாக்டர் அம்பேத்கரின் 70-வது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் பெரியநெசலூர் கிளை நிர்வாகிகள் சாமி பாஸ்கர், இளையராஜா, நல்ல சேவி, வெங்கடேசன் ஆகியோர் ஏற்பாட்டில் 300 பேருக்கு போர்வை, பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் பென்சில் பேனா வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வமணி தலைமையில் நடைபெற்றது.*

*விழாவிற்கு, சிறப்பு அழைப்பாளராக, கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் இஎம்ஆர். விஜய் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், ஒன்றிய இணைச் செயலா- அமைப்பாளர் மும்மூர்த்தி, மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகி சீனிவாசன், மற்றும்ஒன்றியநிர்வாகிகள் மணிவாசகன், ராம்கி, ஆனந்த், நாகராஜ், விக்னேஷ், கிளை கழக நிர்வாகிகள் தங்கதுரை, தங்கமணி, சுமித், மகளிர் அணியினர் நதியா, ஜெயலஷ்மி, விஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*



தென்காசி மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகத்தில் சாம்பவர்வடகரை பேரூராட்சி யாதவர் தெற்கு தெருவை சேர்ந்த ராமையா மகன் மாரியப்பன் கடந்த 30.10.2025ல் தனது மாடுகள் ஐந்து, பெருமாள் என்பவர் மாடுகள் இரண்டு, என மொத்தம் ஏழு எருமை மாடுகள் மேய்ச்சலுக்காக சென்றபோது பொட்டகலம்பகுதி சர்வே எண் 505/3ல் அறுந்து கிடந்த மின் வயர் மூலம் மின்சாரம் தாக்கியதில் ஏழு எருமை மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியானது இது சம்பந்தமாக இறந்த மாடுகளுக்கு தற்போது வரை நிவாரணம் கிடைக்கவில்லை பாதிக்கப்பட்ட மாரியப்பன் ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்து விட்டு எனது மாடுகள் இறந்த பொழுதே அதனை அடக்கம் செய்ய பேரூராட்சியை சேர்ந்த தலைவர் ஜேசிபி மூலம் அடக்கம் செய்ய ரூபாய் 4,500₹ பெற்று கொண்டு அடக்கம் செய்த போதிலும் இயற்கையாக அறுந்து கிடந்த மின் வயர் தாக்கி இறந்தாலும் ம வயர் மேன் அஜாக்கிரதையே காரணம் என்று அவர் மீது தனிபட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசியல் பிரமுகர்கள் மூலம் சாம்பவர்வடகரை காவல்துறைக்கு அழுத்தம் கொடுத்து வழக்குபதிவு செய்ததே எங்களுக்கு நிவாரணம் கிடைப்பதில் காலதாமதம் என கூறப்படுகிறது மழைகாலங்களில் இயற்கை பேரிடராக அறுந்து கிடந்ததற்கு மின்சார ஊழியர் மீது வழக்கு செய்தது இதுவே முதன்முறை என்கின்றனர் இதனால் பாதிக்கப்பட்ட மாட்டின் உரிமையாளர்கள் மாரியப்பன், பெருமாள் ரூபாய் 4,70,000₹ மதிப்பிலான தனது மாடுகளை பலிகொடுத்து வாழ்வாதாரம் போய்விட்டதாகவும் நிவாரணம் கிடைக்கவில்லை என்றால் குடும்பத்துடன் தற்கொலை செய்வதை தவிர வழியில்லை என்று கண்ணீர் மல்க மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்து உள்ளனார்.



மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர் மற்றும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களின் உத்தரவின்படி கழக பொதுச் செயலாளர் அண்ணன் N.ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பல்லடம் யுவராஜ் மகேஷ் அவர்களின் தலைமையில் நகர செயலாளர் MP ரமேஷ் அவர்கள் முன்னிலையில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாராபுரம் வடக்கு நகரம் சார்பாக 07/12/2025 அன்று வார்டு 01 முதல் வார்டு 04 வரை உள்ள முக்கிய பகுதிகளில் நமது தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்புரை மற்றும் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. இவ்விழாவில் நமது தமிழக வெற்றிக் கழக தாராபுரம் நகர இணை செயலாளர் சார்லி விக்டர், நகர துணை செயலாளர் மின்னல் சிலம்பரசன், நகர துணை செயலாளர் உமாதேவி, நகர பொருளாளர் பிரபு, நகர செயற்குழு உறுப்பினர்கள் ரஜினி குமார், ஜாபர், கார்த்திகேயன், இதயக்குமார், தினகரன், சதீஷ், மனோஜ்குமார், மேகலா, மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள், வார்டு செயலாளர்கள், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சகல அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



சட்ட மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஈரோடு மாவட்ட மேற்கு சட்டமன்ற தொகுதி செயலாளர் இம்மானுவேல் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் உடன் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் JK @ DR.M.ஜெயகாந்தன், செயலாளர் கார்த்திகேயன் தலைவர் மோகன்ராஜ் பொருளாளர் முத்து குமரன் வழக்கறிஞர் அணிச்செயலாளர் சரவணன் துணைச் செயலாளர் சுந்தர் ஈரோடு ரஞ்சித் செந்தில், உட்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சிறுபாக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு 2100 மேற்பட்ட பெண்களுக்கு தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ.கணேசன் நலத்திட்ட உதவிகள் (புடவைகள்) வழங்கினார். அப்போது, ஒன்றிய கழகச் செயலாளர் அடரி சின்னசாமி, முன்னாள் சேர்மன் சுகுணா சங்கர் மற்றும் திரளான கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### திருக்கழுக்குன்றம் மணமையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில்

# வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் வேளாண் பணியில் ஈடுபாடு



*செங்கல்பட்டு மாவட்டம் பாபுராயன்பேட்டையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம் வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த தெஸ்ட்டோன் குழு மாணவர்கள் கிராம வேளாண் பணி அனுபவத்திட்டத்தின் ஒரு பகுதியாக கல்லூரி முனைவர் டாக்டர் ஜவஹர்லால் பேராசிரியர் ராஜசேகரன், நவீன்குமார், முகமது இஷான்உல்ல, குங்கும செல்வன், சஸ்மிதா மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சிவகுமார் வழிகாட்டுதலின்படி உலக மண்தினத்தை முன்னிட்டி எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் சார்பில் காலை 9:30 மணி அளவில் திருக்கழுக்குன்றம் ஒன்றியம் மணமையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் உலக மண் தினத்தை கொண்டாடினர்.*

*இந்நிகழ்ச்சியில் கிராம ஊராட்சிதலைவர், பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் வகுப்பு ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பள்ளியில் விளையாட்டு மைதானத்தில் 25 மரக்கன்றுகள் கல்லூரி மாணவர்களின் சார்பில் நடப்பட்டது. தெஸ்டோன் குழு மாணவர்கள் பி.செ. பரணிகுமார், சூரியா சாய் குமார், அபினவ் சோன்சி, பா.பிரசன்ன வெங்கட், கே.சூர்யா, வே.சதீஷ்குமார், ம.ஜெய்சக்திமுருகன், கா.குருபிரசாத், வா.குணச்சந்திரன், வெ.ஹரிஷ் வர குமார், மூ.லாரன்ஸ் ஆகிய கல்லூரி மாணவர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.*



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா பாடியந்தல் கிராமத்தில் மக்கள் பயன்படுத்தும் சாலையானது குண்டும் குழியுமாக இருப்பதாலும் சாலையில் நீர் தேங்கி இருப்பதாலும் மக்கள் அவ்வழியே செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. சாலையில் நீர் தேங்கி உள்ள காரணத்தினால் கொசுக்கள் அமர்ந்து டெங்கு மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாலும் சிறுவர்கள் அப்பகுதியில் விளையாடும் காரணத்தினால் சாலையை விரைந்து சீர் அமைத்து தருமாறு கிராம நிர்வாகத்திடம் கிராம மக்கள் வேண்டுகோள் வைக்கின்றனர். கிராம நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்குமா என கிராம மக்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☏ +919444082959



தமிழக வெற்றிக் கழக தலைவர் தளபதி.விஜய் ஆணைக்கிணங்க, மாநில பொதுச்செயலாளர் ஆனந்த் அறிவுறுத்தலின்படி, தென்காசி மத்திய மாவட்ட கழக செயலாளர் J.A.S.ராஜபிரகாஷ் சுரண்டை பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவருக்கு. நிதி உதவி அளித்தார். அதனைப்பெற்றுக்கொண்ட மாற்றுத்திறனாளி அவர்கள். எங்களைப் போன்ற மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றிட 2026 ல் என் அண்ணன் வெற்றிதளபதிவிஜய்அவர்கள்தமிழ்நாடுமுதலமைச்சராக வரவேண்டும். என்று மன மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்தார்.

# அச்சிறுப்பாக்கம் ஆட்சீஸ்வரர் திருக்கோயிலில் ஆருத்ரா தரிசனம்



*மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கத்தில் ஸ்ரீ இளங்கிளி அம்மன் உடனுறை ஸ்ரீ ஆட்சீஸ்வரர் திருக்கோயில் ஆருத்ரா தரிசன விழா நடராஜபெருமானுக்குசிறப்புஅபிஷேக அலங்கார ஆராதனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கோபுர தரிசனத்தில் ஸ்ரீநடராஜபெருமானும்சிவகாமசுந்தரையும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். அதன் பின்னர் நடராஜ பெருமானும் சிவகாமசுந்தரரும் மாட வீதிகளில் வளம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். அச்சிமுறிவிநாயகர்கோயிலில் சிவகாமசுந்தரிக்கும் நடராஜ பெருமாளுக்கும் திருஉடல் உற்சவம் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு தீபா ஆராதனை காண்பிக்கப்பட்டு அன்னதானம் மற்றும் சிறப்பு பிரசாதமாக ஆருத்ரா கலி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.*






மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்களித்ததை உறுதி செய்யும் ஒப்புகைச் சீட்டுக் கருவி (VVPAT) ஆகிய இயந்திரங்களில் முதல்நிலை சரிபார்ப்பு (First Level Checking) பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அவர்களின் துணைவியாரும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி குழுமத்தின் தாளாளரும் கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் தாயாருமான பவானி அம்மாள் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அம்மையாரின் நினைவிடத்தில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராஜேந்திரன், விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், சட்டதிட்ட குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகரன் ஆகியோருடன் இணைந்து அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர்.

# வீரசாம்பவி திருக்கோவிலில் சிறப்பு பூஜை, அன்னதானம்



செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருகே வீரசாம்பவி திருக்கோவிலில் குழந்தை பாக்கியம் பெற்றதை வேண்டி நேர்த்தி கடன் நிறைவேற்றம் செய்தனர்.

மேல்மருவத்தூர் அருகே திருமுக்காடு ஊராட்சியில் வீரசாம்பவி திருக்கோவில் உள்ளது. இத்திருக்கோவிலில் எழுந்து அருள்பாளிக்கும் அங்காள பரமேஸ்வரி வீரசாம்பவி கோவிலுக்கு கர்நாடக மாநிலம் தேவாரபுரத்தை சேர்ந்த சினேகா சுனில் தம்பதியர் வீரசாம்பவி கோவிலுக்கு வந்து குழந்தை பாக்கியம் வேண்டி வேண்டுதல் செய்தனர். குழந்தை பாக்கியம் வேண்டுதல் நிறைவேரிய நிலையில் குழந்தைக்கு பெயர் சூட்டி அம்மனுக்கு பொங்கல் வைத்து சிறப்பு அபிஷேகம் அலங்காரம் ஆராதனைகள் செய்தி நேர்த்தி கடன் செலுத்தி பக்தர்களுக்கு விஜய வீர சாம்பவி சுவாமிகள் முன்னிலையில் அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்வில் கிராம மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சித்தாமூர் அருகே பொலம்பாக்கம் சின்ன கயப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் அடுத்த பொலம்பாக்கம், சின்ன கயப்பாக்கம் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு 11 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசு சார்பில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சி விசிக செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க. சுந்தர் சிறப்புரையாற்றி பள்ளி மாணவமாணவிகளுக்கு மிதிவண்டியை வழங்கினார் இப்பள்ளியில் பயின்ற மாணவ மாணவிகள் முதல் மதிப்பெண் இரண்டாம் மதிப்பெண் மூன்றாம் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஊக்க தொகையை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் சித்தாமூர் ஒன்றியகுழு பெருந்தலைவர் ஏழுமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் சிற்றரசு விசிக மேனாள் மாவட்ட செயலாளர் சூ.க.ஆதவன் மாவட்ட அமைப்பாளர் சாரங்கன்

ஓவியர் அணி மாநில துணைசெயலாளர் ஒவியன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோபால் அகரம் ஊராட்சி மன்ற தலைவர் முரளி ஒன்றிய பொருளாளர் மதிழயகன் ஒன்றிய குழு உறுப்பினர் சிம்பு (எ) மோகன்ராஜ் பொலம்பாக்கம் அரசுமேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) ஏ வி வாசுகி உதவி தலைமை ஆசிரியர் எஸ். சேகர்

எஸ் சண்முக பிரியா மற்றும் விசிக நிர்வாகிகள் குணசேகரன் வினோத் மனோஜ் உள்ளிட்ட. ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

# கோவையில் தனிஷ்க் ஜுவல்லரி சார்பாக, 3 நாட்கள், உயர் ரக வைர நகைகள் கண்காட்சி மற்றும் விற்பனைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது




டாடா குழுமத்தின் தங்கம் மற்றும் வைர நகை விற்பனை பிராண்டான தனிஷ்க் ஜூவல்லரி சார்பாக, வரும் 13ம் தேதி சனிக்கிழமை முதல் 15ம் தேதி திங்கள்கிழமை வரை கோவை பந்தயசாலையில் உள்ள தாஜ் விவான்தா உணவகத்தில், இந்த உயர்ரக வைர நகை கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெறவுள்ளது.

இது குறித்த செய்தியாளர் சந்திப்பு கோவை ஒப்பனக்கார வீதியில் அமைந்துள்ள தனிஷ்க் ஜிவல்லரி ஷோரூமில் நடைபெற்றது. அப்பொழுது இந்நிறுவனத்தின் கோவை ஏரியா பிஸ்னஸ் மேலாளர்கள் சிவரஞ்சனி மற்றும் நவீன் குமார் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

டிசம்பர் 13ம் தேதி முதல் 15ம் தேதி வரை மூன்று நாட்களுக்கு தாஜ் விவான்தா ஹோட்டலில் இந்த உயர்ரக வைர நகை கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் 500க்கும் அதிகமான டிசைன்களில் வைர நகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளது எனவும், இவை அனைத்தும் திருமண சீசனுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டவைகளாகும் என்றனர்.

"தனிஷ்க் வைர நகைகள் முழுக்க முழுக்க இயற்கை வைரங்கள் எனவும், வைரங்களின் கட் மற்றும் தெளிவுதன்மை மிக நேர்த்தியாக இருக்கும்," என சிவரஞ்சனி தெரிவித்தார்.

இந்த கண்காட்சியை காணவரும் வாடிக்கையாளர்கள் பயன்பெறும்படி சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்தமான நகையை அன்றே வாங்கலாம் அல்லது அதன் 50 சதவிகித கட்டணத்தை செலுத்தி அந்த நகையை அன்றைய விலைக்கு முன்பதிவு செய்துவைத்துக்கொள்ளலாம். மீதம் நகைக்கான கட்டணத்தை நகையை பின்னர் வாங்க வரும்போது செலுத்தலாம் என்ற சிறப்பு திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளதாக கூறினார்.

மேலும், தங்களின் பழைய தங்கத்தை வைரமாக மாற்றும் வசதியும் இந்த கண்காட்சியில் இடம்பெறும். அதன்படி, தங்கத்தின் மதிப்புக்கு ஏற்ப வைர நகைகளை பெற்றுக்கொள்ளலாம் என்றார். இத்துடன், திருமண நகைகள் வாங்கும் பெண்ககளுக்கு சிறப்பு பிரைடல் போட்டோ சூட், இந்த பிரத்தியேக அரங்கில் செய்துகொடுக்கப்படும். இவையெல்லாம் இந்த 3 நாட்கள் நடைபெறும் சிறப்பு என தெரிவித்தனர்.



## கோவை புலியகுளம் பகுதியில் உள்ள விநாயகர் திருக்கோயிலில்

# சோனியா காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றது

டிசம்பர் 9ம் தேதி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவி சோனியா காந்தியின் பிறந்தநாள் விழா கொண்டாட பட்டு வருகின்றது. இவரது 79வது பிறந்தநாளை முன்னிட்டு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக கோவை புலியகுளம் பகுதியில் உள்ள முந்தி விநாயகர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சியின் மாநகர் மாவட்ட மகளிரணி தலைவி சோபனா செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சர்க்கிள் தலைவர் கனேசன், ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து சோனியா காந்தியின் பெயருக்கு சிறப்பு வழிபாடுகள், பூஜைகள் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட தலைவர் விஜயகுமார், சிங்கை செல்வராஜ், 54வது வார்டு தலைவர் செல்வராஜ், கருணாகரன், சிங்கை சுரேஷ், 59வது வார்டு தலைவர் மணிகண்டன், வார்டு செயலாளர் குமார், பறக்கும் படை ராஜ்குமார், பூபாலகிருஷ்ணன், அமுல்ராஜ், கனேசன், காந்தன், காலனி பிரபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது



சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோருக்கு ரூ5,00,000/-(ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) விருது தொகையும் ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகிறது. இவ்விருதாளர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்வு செய்யப்படுகிறார். தங்களது விண்ணப்பம், சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூக நீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். இது குறித்த கூடுதல் விவரங்கள் அறிய வேண்டுவோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய கட்டிடத்தில் 4ம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்கள் விவரம் முழு முகவரியுடன் 18.12.2025-க்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய கட்டிடத்தில் 4ம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், ஈரோடு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# "தவெக தலைவர் விஜய் இன்னும் சினிமா டயலாக் தான் பேசுகிறார்" மதுரையில் வைகோ பேட்டி



மதுரைக்கு விமானம் மூலமாக வந்த மதிமுக வைகோ செய்தியாளரை சந்தித்தார்

வருகிற ஆண்டு 2026, ஜனவரி முதல் நாள் அன்று செய்தியாளர்களையும் தொலைக்காட்சி உரையாடல் நபர்களையும் திருச்சியில் சந்திக்கிறேன்.

மறுநாள் காலையில், தமிழ்நாட்டில் போதைப் பொருட்களையும், டிரக்ஸ் கஞ்சாவையும் அடியோடு ஒழித்தார் என்று இளைய சமுதாயமும், மாணவ சமுதாயமும் பாழாகிப் போய்விடும். தமிழகம் பஞ்சாபை போல மோசமான நிலைமைக்கு வந்து சேரும் என்பதனால், அதனை வலியுறுத்தி, நான் தொடங்குவதாக திருச்சியில் புறப்படுகிற சமத்துவ நடை பயணத்தை, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

அந்தப் பயணத்தை வாழ்த்தி, காங்கிரஸ் கட்சியுடைய தமிழ் மாநில தலைவர் செல்வ பெருந்தகை அவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் சகோதரர் ஹைதீன் அவர்களும், விடுதலை சிறுத்தைகள் நிறுவன தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களும், அங்கே வாழ்த்து பேசுகிறார்கள்.

மற்ற தோழமை கட்சி தலைவர்கள் எல்லாம் விராலி மலையிலும், அதன் பிறகு, துவரன் மூர்த்தியிலும், சாரி, துவரன் மூர்த்தியிலும், மேலூரிலும் நடக்கின்ற கூட்டங்களில் பங்கேற்கிறார்கள்.

மற்ற தோழமை கட்சி தலைவர்கள் வந்துள்ள மதுரை ஜனவரி 22ஆம் தேதி பயணம் நிறைவு பெறுகிறது. அந்த நிறைவு நிகழ்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் பூமநாதன் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். திருச்சியில் முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்

நிகழ்ச்சியில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. துரைவைகோ அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மூன்று மாவட்ட செயலாளர்களும், வெள்ளப்பட்டி சோமு, டி.சி. சீயரன், மணவை தமிழ் மாணிக்கம் முன்னிலை வகிக்கிறார்கள். 1,050 பேர் என்னோடு நடை பயணத்திலே கலந்து கொள்கிறார்கள். போக்குவரத்தை ஒழுங்கு செய்து கொண்டே இரண்டு, இரண்டு பேராக நடப்பார்கள். இது பத்தாவது நடைபயணம்

எனக்கு. எங்கள் நடைபயணத்தின் போது போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இருக்காது. எங்களுடைய அணித் தலைவர்களே போக்குவரத்தை ஒழுங்கு செய்து கொண்டே வருவார்கள். போலீசாருக்கு, எங்கள் வேலையை நீங்கள் செய்கிறீர்கள் என்று நான் கடந்த காலங்களில் சொல்லியிருக்கிறேன். அந்த விதத்தில் இந்த நடைபயணம் நல்ல நோக்கத்தோடு தமிழ்நாட்டை, இந்த விசப் படியிலே இருந்து பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஏன் சில இடங்களில் மாணவிகள் கூட அதற்கு அடிமையாகின்ற கொடுமை கேள்விப்படுகிறோம். கோவையிலே ஒரு இளம் பெண் நாலு மிருகங்களால் நாசமாக்கப்பட்டாரே, அந்த நாலு பேரும் அவர்கள் போதைப் பொருள் தான் அருந்திருந்தார்கள். மதுவை விட கொடியது இந்த போதைப் பொருள். மதுவிலே பக்கத்திலே போராடியவர் வந்து அது அருந்ததை கண்டுபிடித்து விடலாம். ஆனால் கஞ்சாவோ, டிரக்ஸோ அடிச்சவரை கண்டுபிடிக்கவே முடியாது. அது செயல்பாட்டைத்தான் கண்டுபிடிக்க முடியும். இது ஒரு ஆறு மாத காலமாக நான் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். இடைப்பட்ட காலத்தில் இரண்டு, மூன்று முறை என் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் மருத்துவமனையில் இருந்ததனால், நான் அப்பொழுது அதைத் தொடர முடியவில்லை. எனவே, இந்த சமத்துவ நடை பயணத்தில் நிறைய இளைஞர்கள், படித்த இளைஞர்கள், கல்லூரிகளிலே படிக்கின்ற இளைஞர்கள், மாணவர்கள் விடுமுறை எங்களுக்கு இருக்கிறது, செமஸ்டர் லீவு இருக்கிறது, வருகிறோம் என்று சொல்லித்தான் நான் நேரடியாக ஏழு மண்டலங்களுக்கும் சென்று தேர்ந்தெடுத்தேன். ஒவ்வொருவரையும் தனித்தனியாக உட்கார வைத்து, அவர்களிடம் சில கேள்விகள் கேட்டு, மிக முன்யோசனையோடுதான் அவர்களை இந்த அணியிலே இந்த நடை பயணத்திலே சேர்த்திருக்கின்றோம். இது அதே நேரத்தில், நடைபெற்று கொண்டிருக்கக்கூடிய திராவிட மாடல் நல்லாட்சியை சகோதரர் மாண்புமிகு தளபதி ஸ்டாலின் நடத்தி வருகிற நல்லாட்சியை 2020

மக்கள் ஆதரவையும், என்னுடைய நடை பயணத்தின் போதே, அந்த கருத்தை அரசியல் ரீதியிலான கருத்தை நான் பதிவு செய்வேன். உறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம், யார் என்ன முயற்சிகள், எந்தக் கட்சிகள் செய்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான கூட்டணி உறுதியாக வெற்றி பெறும்; திமுக தனிப் பெரும்பான்மை பெற்று அவர்கள் மீண்டும் ஆட்சி அமைப்பார்கள் என்பது என்னுடைய கணிப்பு. இப்பொழுது, திருப்பரங்குன்றத்திலே ஏற்படுத்தப்பட்ட பிரச்சனை,

அது திட்டமிட்டு இந்துத்வா பாதைகளால், நூறாண்டுகளுக்கு மேலாக அந்த தூயலை, விளக்கு தூயலை போய் விளக்கேற்றுகிற வழக்கம் கிடையாது. அந்த வெள்ளையார் கோயிலிலே, முத்து பிள்ளையார் கோயிலிலே, அவர்கள் சுடர் ஏற்றி வைத்துவிட்டுப் போயிருந்தார்கள்.

இதேபோல்தான் பாண்டிச்சேரிக்குப் போகலாம், அங்கு போய் அவர் பேசலாம். தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். அவர் பல இடங்களில் சொல்லியிருக்கிறார்கள், அவர் போய் பிரச்சாரம் பண்ணிப் பார்க்கட்டும். ஆனால், அந்தப் பிரச்சாரத்தில் அவர் என்ன கருத்தைச் சொல்லுகிறார் என்பதை நாம் கவனித்து பார்ப்போம். என தெரிவித்தார்



ஈரோடு இந்து முன்னணி மாவட்ட செயலாளரும், மத்திய அரசு வழக்கறிஞருமான D.முரளி ,ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா அவர்களிடம் நேற்று வழங்கிய மனுவில் (09.12.2025)ஆம் தேதியன்று காலை எனது வீட்டிலிருந்து நீதிமன்றத்திற்கு வரும் வழியில், "அமைதி நிலவும் தமிழ்நாட்டில் முருகன் பெயரில் மதவெறியா" என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டியிருப்பதை கண்டேன். மேலும், சுவரொட்டியில் எந்தவொரு தொடர்பு எண்ணும் எந்த அமைப்பை சார்ந்தவர்கள் என்றும், எங்கு அச்சிடப்பட்ட விவரம் எதுவும் இல்லாமலும், மத கலவரத்தை தூண்டும் விதமாக தமிழ் கடவுளான முருகனை பயன்படுத்தி இந்துக்கள் மனம் புண்படும்படி இருக்கும் சுவரொட்டி ஒட்டிய நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும், அந்த நபர்களே சுவரொட்டியை அப்புறப்படுத்துமாறும் மனுவில் தெரிவித்துள்ளார்.

## ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 2025, 26 ஆம் கல்வியாண்டில்

## அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 546 மாணவ, மாணவியர்கள் அறிவியல் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்





அரசுப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் STEM (அறிவியல், தொழில்நுட்பம்,பொறியியல் கணிதம்) திட்டத்தின் கீழ் அறிவியல் அருங்காட்சியகங்கள். கோளரங்கங்கள். உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களைப் பார்வையிட்டு அங்குள்ள நடைமுறைகளை தெரிந்து கொள்ளவதன் வாயிலாக மாணவர்களுக்கு அறிவியல் மீதுள்ள ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும், படைப்பாற்றல் சிந்தனைகளை தூண்டவும், அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த கருவிகளை உருவாக்கவும் ஏதுவாக அமையும் என்ற நோக்கத்தில் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 2025-26 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 546 மாணவ, மாணவியர்கள் மாநிலத் திட்ட அலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல் மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு (08.12.2025) அன்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,மீன்வளத்துறை மையம். சித்தோடு அரசு பொறியியல் கல்லூரி, முத்தம்பாளையம் STEM பார்க், பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி ஆகிய இடங்களுக்குகல்விச்சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கல்விச் சுற்றுலாசென்றஅனைத்து மாணவ, மாணவியர்களுக்கு சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது.

இதில் மாணவ, மாணவியர்கள் பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய பயிர் இரகங்கள், மேம்பட்ட சாகுபடி முறைகள், மண்புழு உரம் தயாரித்தல் கிறத்தும், மீன்வளத்துறை மையத்தில் மீன்வளர்ப்பு நுட்பங்கள் குறித்தும் நேரடி அனுபவத்தை பெற்றனர். ஈரோடு STEM பார்க்கில் (அறிவியல் தொழில்நுட்பப் பூங்கா] அறிவியல் மற்றும் கணிதம் சார்ந்த கருத்துக்களை விளையட்டாகவும் நேரடி அனுபவமாகவும் கற்றுக் கொண்டனர். மேலும் இங்குள்ள டிஜிட்டல் கோளரங்களில் கோள்களின் இயக்கம் மற்றும் விண்மீன் திறள்கள் இயங்கும்விதத்தை முப்பரிமாண வீடியோவாக பார்த்து புரிந்து கொண்டணர். ஈரோடு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ உபகரணங்கள் உடல் உறுப்பு மாதிரிகளை பார்வையிட்டு தெரிந்து கொண்டனர். ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் உள்ள ஆய்வகங்களை பார்வையிட்டு பல்வேறு பொறியியல் கருவிகள் இயங்கும் விதம் மற்றும் அமைப்புகள் குறித்து தெரிந்து கொண்டனர். இந்த கல்விச் சுற்றுலா மாணவ, மாணவியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இந்த கல்விச் சுற்றுலாவில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, ஆசிரியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாமாண்டு மாணவர்கள் வரவேற்பு விழா



ஈரோடு நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாமாண்டு புதிய மாணவர்களின் "சிஷ்யோபநயன" வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் எம். கிருத்திகா வரவேற்று பேசினார். என்பது பின்னர் சென்னையில் செயல்பட்டு வரும் தன்வந்திராலயா மற்றும் மலேசியாவின் ஸ்மிருதி ஆயுர்வேத நிறுவனத்தின் தலைவரும், இந்திய மருத்துவ கவுன்சிலின் முன்னாள் தலைவருமான மருத்துவர் வனிதா ஆர். முரளிகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது கூறுகையில், ஆயுர்வேத சிகிச்சை மூலிகை மருத்துவம், உணவு முறை, மசாஜ் (அப்யங்கா), தியானம் மற்றும் நச்சு நீக்கம் (பஞ்சகர்மா) ஆகியவற்றை உள்ளக்கியது. மனம், உடல் மற்றும் ஆன்மாவை பாராபரிய முறையில் சமநிலப்படுத்தப்படுகிறது என்று சுட்டிக் காட்டினார். மேலும் நோய்க்கான மூலக்காரணங்களை நிவர்த்தி செய்ய, பெரும்பாலும் வாழ்க்கை முறை மாற்றங்கள், தனிப்பயனாக்கப்பட்ட எண்ணெய்கள் மற்றும் நீண்டகால நல்வாழ்வுக்கான பொறுமை ஆகியவற்றினை உள்ளடக்கியது என்று ஆயுர்வேத சிகிச்சையின் முன்னேற்றம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். விழாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் அவர்தம் பெற்றோர்களையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவன ங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் நிர்வாக அலுவலர் மருத்துவர் ஜீ. தர்மராஜ் ஆகியோர் பாராட்டி, தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் அண்ணல் காந்தியடிகள் மற்றும் ஜவகர்லால் நேரு , ஆகியோர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவில் நடத்தப்பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை, பாராட்டுச்சான்றிதழ் மற்றும் புத்தகம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு மாவட்ட பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சீ நாகராசன் மறைவு செய்தியை அறிந்த தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கழக நிர்வாகிகளுடன் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

## ஈரோடு பாசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா

ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம், பாசூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கான தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நேற்று (09.12.2025) பள்ளிவளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.



இவ்விழாவில் ஈரோடு மாவட்ட மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் அரசு மேற்கொள்ளும் நலத்திட்டங்களில்ஒன்று எனவும், இந்த மிதிவண்டிகள் மாணவர்களின் கல்விப் பயணத்தை மேலும் எளிதாக்கும் எனவும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர்,பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்,ஆசிரியர்கள் & மாணவ-மாணவியர்கள்,

- பாஜக கொடுமுடி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள்

அனைவரும் கலந்து கொண்டு நிகழ்வை மேலும் சிறப்பித்தனர்.

## ஈரோட்டில் சோனியா காந்தி பிறந்தநாள் விழா; மும்மதப் பிரார்த்தனை, கேக் வெட்டி கொண்டாடிய காங்கிரஸ் கட்சியினர்







இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி 79-வது பிறந்தநாள் விழா, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நேற்று (09.12.2025) கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி. திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மும்மதப் பிரார்த்தனைகள் செய்யப்பட்டு, இறுதியாக காங்கிரஸ் அலுவலகத்தில் கேக் வெட்டி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்

. மத நல்லிணக்கத்துடன் கூடிய சிறப்பு நிகழ்ச்சிகள் அன்னை சோனியா காந்தி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,ஈரோட்டில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்தபிறந்தநாள்கொண்டாட்டத்தில், மாமன்ற உறுப்பினரும் முன்னாள் மாவட்ட தலைவருமான ஈ. பி. ரவி, துணை தலைவர்களான பா. ராஜேஷ் ராஜப்பா, ஜே.பி.கோதண்டபாணி,பாபு என்கிற வெங்கடாசலம், மாநில பொதுக்குழு உறுப்பினரான எ. மாரியப்பன், பொது செயலாளர்களான எ. வின்செண்ட், ஏ. சி. சாகுல் ஹமீது,கராத்தேயூசுப்,முதலாம் மண்டல தலைவர் மாமரத்து பாளையம் எஸ். கோபி, மூன்றாம் மண்டல தலைவர் சாம்ராட் அசோக், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணை தலைவர் எம். ஜவஹர் அலி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டிசிடியூ) மாநிலத் துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன், முன்னாள் வட்டாரத் தலைவர் எம். செல்வராஜ், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம.முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே. என். பாஷா, நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி. மாரிமுத்து,ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ்தலைவர்சித்தோடு எஸ் பிரபு, ஈ. வி. கே. சம்பத் பேரவை தலைவர் டி. என். சீனிவாசன், நசியனூர் கவுன்சிலர் எம். ஆர். நட்ராஜ், நசியனூர் என். பி. சுப்பிரமணியம், மாஸ்டர் அழகேசன்,ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத்தலைவர் சங்குநகர் சதாம் உசேன்,என். சி. டபிள்யூ. சி. மாவட்ட தலைவி ஆர். கிருஷ்ணவேணி, சேவாதளம் மாநில செயலாளர் எம். பேபி, ஓ. பி. சி. பிரிவு மாவட்ட தலைவர் சூர்யா சித்திக், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை தலைவர் இப்ராஹிம், மாவட்ட நிர்வாகிகளான முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை சுப்பிரமணியம், பெரியார் நகர் சூரஜ்,நூருதீன்,கே.ஜே. டிட்டோ, மரப்பாலம் பாஸ்கர், சாகா, ஜெ. சதீஷ், ராஜாஜிபுரம் சிவா, பி. குமரேசன், செங்கோடம்பள்ளம் பாஸ்கர், விஜயராகவன், ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரசன்னா, பத்ரி,தினகரன், சூரம்பட்டி வார்டு தலைவர் கே. விஜயகுமார்,டீகடை லோகு, நரிப்பள்ளம் ரவிச்சந்திரன் மற்றும் பலர் திரளாகக் கலந்து கொண்டு சோனியா காந்திக்கு வாழ்த்து தெரிவித்தனர்.







ஈரோடு மாவட்டம் சத்திமங்கலத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் சோனியா காந்தி 79வதுபிறந்தநாள்நிகழ்ச்சிசத்தியமங்கலம்மணிக்கூண்டு அருகில் ஈரோடு வடக்கு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை தலைவர் ஜஹாங்கீர் தலைமையில் பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் சந்திரசேகர் அப்துல் ரகுமான் மூத்த தலைவர் எஸ்.எம்.எஸ் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் தேசிய தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர் . இந்த நிகழ்விற்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து சத்தி நகர காங்கிரஸ் சிறுபான்மை தலைவர் அப்சல் நன்றியுரை கூறினார்.

## தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் காசநோய் குறித்த விழிப்புணர்வு

தேவகோட்டை - சிவகங்கைமாவட்டம்தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் காசநோய் குறித்த விழிப்புணர்வு நடைபெற்றது. ஆசிரியை வள்ளிமயில் வரவேற்றா.ர் தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.ஆல்தசில்ட்ரன்தொண்டுநிறுவனமாவட்ட




ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் முன்னிலை வகித்தார். ரீடாஅறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் தேவகோட்டை கணேசன் மாணவர்களிடம் காச நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசுகையில் , காசநோய் என்பது காற்றில் பரவக்கூடிய வைரஸ் ஆகும். மற்ற வைரஸ் எல்லாமே தரைக்கு வந்து விடும்.

காசநோய் வைரஸ் இருபத்தி நான்கு மணி நேரம் காற்றிலேயே இருக்கும். காசநோய் வைரஸ் பரவும் வேகம் மிக அதிகம். காச நோய் வருவது தெரியாது.

ஆர தொடர்ந்து ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்குஇருமல்,சளியுடன்இரத்தம்சேர்ந்துவருதல், மாலை நேரக் காய்ச்சல், உடனே எடை குறைவது போன்றவை ஆகும். காச நோய் முழுமையாக குணப்படுத்தக் கூடிய ஒன்றாகும். வேறு நோய்களை முழுமையாக குணப்படுத்துவது சில நேரங்களில் சிரமமாக இருக்கும். நமக்கு உடல் நிலை சரியி ல்லை என்றால் நாம் மருத்துவரை அணுக வேண்டும். மருத்துவர் ஆலோசனைப்படி மருந்துகளை வாங்கி சாப்பிடவேண்டும். அரசு ஆஸ்பத்திரியில் காசநோயைக்என்றுதனிப்பிரிவுஉள்ளது. காசநோய் அறிகுறிகள் தென்பட்டால் நாம் உடனே மருத்துவமனையில் காண்பிக்க வேண்டும். இல்லையென்றால் நுரையீரலை பாதிக்கும். நுரையீரல் பாதித்தால் சிறுநீரகம், மூளை மற்ற நரம்புகளை பாதிக்கும்.

## தூத்துக்குடியில் சோனியா காந்தி பிறந்தநாள் விழா ஐஎன்டியூசி காங்கிரஸ் சார்பில் கேக் வெட்டிக்கொண்டாட்டம்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவருமான அன்னை சோனியா காந்தியின் 79வது பிறந்தநாளை முன்னிட்டு தனசேகர் நகரில் அமைந்துள்ள ஸ்ரீ லஷ்மிமஹாலில்வைத்துமாநிலஐஎன்டியூசிபொதுச் செயலாளர்காங்கிரஸ்மாநிலபொது குழு உறுப்பினர்



முன்னாள் தூத்துக்குடி பாராளுமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பெருமாள் சாமி ஏற்பாட்டின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் ஒர்க்கர்ஸ் கமிட்டி தூத்துக்குடி மாவட்ட தலைவர் ஜெயக்கொடி தலைமையில் ஏ.ஐ.சி.டபிள்யூ.சி மகிளா காங்கிரஸ் மாவட்ட துணை தலைவி இசக்கியம்மாள் ஆகியோர் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடினார்.

இதில் காங்கிரஸ் தேசியத் தொண்டர்கள் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வர்த்தக காங்கிரஸ் மாவட்ட தலைவர்டேவிட்பிரபாகரன்,தெற்குமண்டலதலைவர் தங்கராஜ்,பழங்குடியினர் பிரிவு மாநிலச் செயலாளர் முனியசாமி, மாவட்ட பொது செயலாளர் இக்னேஷியஸ், மீனவர் அணி மிக்கேல் குரூஸ், வர்த்தக காங்கிரஸ் மாவட்ட செயலாளர் நேரு, ரூஸ்வெல்ட்,ஆராய்ச்சி துறை சிவராஜ் மோகன்,எஸ். சி.எஸ்.டி பிரிவு முன்னாள் தலைவர் ராஜாராம், சேகர்,நெல்சன் ,சுரேஷ்குமார், முருகேசன், ஆனந்தராஜ், வழக்கறிஞர் செல்வம், காமராஜ், சேக்ஸ்பியர்,தெர்மல்,முத்து,எஸ்.எம்.டி.சுந்தர்ராஜன் வாசி ராஜன், அய்யாதுரை, ஏசுதாஸ், பழனி

ஐஎன்டியூசி சார்ந்த சிவலிங்கம், முத்து, ரமேஷ், பாலன்,கிரிதரன்,பிரபு மற்றும் தேசியத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.